**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 133/2021 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.2 |
| Name : | திருமதி. பாப்பாத்தி |
| Father's Name/Husband Name: | திரு. அண்ணாதுரை |
| Village : | கொளத்தூர் |
| Taluk : | ஆலத்தூர் |
| Age : | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.04.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரி கற்பகவள்ளி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொளத்தூர் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. சம்பவத்தன்று நான் காட்டில் வேலை செய்வதற்காக சென்றுவிட்டேன். புகார்தாரரை யார் திட்டி அவமானப்படுத்தினார்கள் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 19.02.2020ம் தேதி மாலை 5 மணியளவில் நானும் என்னுடைய கணவரும் வீட்டில் இருந்த போது அருகில் குடியிருக்கும் சின்னப்பிள்ளை வீட்டிலிருந்து சத்தம் கேட்டு வெளியே சென்று பார்த்தோம் என்றால் சரியல்ல. சின்னப்பிள்ளை அவருடைய வீட்டிலிருந்து புளி கரைத்த தண்ணீரை எதிரியின்

வீட்டு முன்பு ஊற்றியதாகவும் எதிரி புகார்தாரரை கெட்ட வார்த்தையால் திட்டி செருப்பால் அடித்து முடியை பிடித்து இழுத்ததை நான் நேரில் பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் நான் சம்பவத்தை பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எதிரிக்காக ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.